# மீட்பு தெளிவாக உரைப்பட்டது

*குழப்புவிக்கும் பல தீர்க்கதரிசனங்களுக்கு நடபடிகள் விடையளிக்கின்றது. இந்தப் புத்தகமானது வேதாகமத்தில் இருந்து நீக்கப்படுமென்றால், பழைய ஏற்பாட்டிற்கு மிகச் சிறிய அளவே அர்த்தம் இருக்கும், ஏனென்றால் ஆதியில் ஏற்படுத்தப்பட்ட அநேக முன்னுரைத்தல்கள் அறியப்படாமலும் நிறைவேற்றப்படாமலும் விடப்பட்டிருக்கும்! புதிய ஏற்பாட்டிற்கும் இது உண்மையாகவே உள்ளது, ஏனென்றால் நடபடியில் நடந்ததைப் பற்றி அறிந்து கொள்ளாத வரையிலும் நடபடிகளைத் தொடர்ந்து வரும் பல போதனைகள் சிறிதளவு அர்த்தமுள்ளதாகவே இருந்திருக்கும்.*

*தேவனுடைய இரட்சிப்பின் மாபெரும் திட்டமானது நடபடிகளில் மையம் கொண்டுள்ளது. இப்புத்தகத்திற்கு முன்புள்ள ஒவ்வொரு விஷயமும் இப்புத்தகத்தில் உள்ள நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவதாகவே உள்ளன; இப்புத்தகத் திற்குப் பின்புள்ள ஒவ்வொரு விஷயமும் நடபடிகளில் பதியப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை நிச்சயப்படுத்துபவையாகவே உள்ளன. வேதாகமம் முழுவதிலும் காணப்படுகின்ற விரைவுணர்வு, முழுமை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவை நடபடிகளை ஒருவர் ஜீரணிக்கும் பொழுதுதான் உணரப் படுகின்றது. இந்தப் புத்தகம் இல்லையென்றால் ஒரு புதிரான வெற்றிடமே எஞ்சியிருக்கும்.*

## ஒரு தொடக்கமாக நடபடிகள்

*பழைய ஏற்பாட்டுப் புத்தகமான ஆதியாகமத்தைப் போலவே நடபடிகளும் தொடக்கங்களின் புத்தகமாக உள்ளது. உண்மையில், அப். 2ன் நிகழ்ச்சிகள் நடந்து பத்து ஆண்டு களுக்குப் பின்னதாக பேதுரு அந்த நிகழ்ச்சிகளை “ஆதியிலே” என்று குறிப்பிட்டார் (அப். 11:15). இயேசுவின் வரலாறு*

பற்றிய நான்கு குறிப்பேடுகளுடன் (சுவிசேஷங்களுடன்) புதிய ஏற்பாடு தொடங்கினாலும், வேதாகமத்தை வினயமாகக் கற்கும் மாணவர்கள் நடபடிகளில்தான் திகைப்பூட்டும் தொடக்கங்கள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்வது சரியானதும், பொருத்தமானதும் ஆகும். (இயேசுவின் வாழ்வில் அவரது சிலுவை மரணம் வரையிலும் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் உண்மையில் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இருந்த கால கட்டத்தில் நடந்தவையாகும், ஆகையால் அவைகள் பழைய ஏற்பாட்டுக் காலங்களின் ஒரு பகுதியாகும்.)

பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள் (அப். 2) சுவிசேஷத்தை அதன் முழுமையுடன் பிரசங்கிப்பதின் தொடக்கத்தை உள்ளடக்கியுள்ளன. விசுவாசித்தவர்கள் மனந்திரும்பி, இயேசுவே கிறிஸ்து என்னும் அதிகாரத்தில், "இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே" (அப். 2:38) ஞானஸ்நானம் பெறும்படி அழைக்கப்பட்டனர். அது கிறிஸ்துவுடன் ஒரு விசேஷித்த வழியில் இணைக்கப்பட்ட அழைக்கப்பட்ட மக்களின் கூட்டமாகிய சபையின் தொடக்க காலமாய் இருந்தது. சபை என்ற தேவனுடைய ஆலயத்திற்கு (1 கொரி. 3:16) ஜீவனைக் கொடுக்கவும், அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையளிக்கவும் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாகத் தம்முடைய விசேஷித்த ஊழியத்தைச் செய்யத் தொடங்கிய நேரம் அதுவேயாகும். உலகளாவிய ஊழியத்தின் தொடக்க நாளாக இந்தநாள் குறிக்கப்பட்டது, ஏனென்றால் இப்படிப்பட்டதொரு ஐக்கியத்தில் அங்கம் வகிக்கும்படி எல்லா மக்களையும் தேவனுடைய ஜனங்கள் இதற்கு முன் உற்சாகப்படுத்தும்படியாக ஒரு பொழுதும் தூண்டப்பட்டதில்லை. பழைய ஏற்பாட்டிற்கு ஆதியாகமம் எப்படியோ, அப்படியே புதிய ஏற்பாட்டிற்கு நடபடிகள் உள்ளது.

நடபடிகளானது உடனடியாக மற்றும் குறிப்பிடத்தக்க "இரண்டை" வெளிக்காட்டுகின்றது. இந்தப் புத்தகமே இரு பெரும் பிரிவுகளால் ஆனதாகும்: அதிகாரங்கள் 1 முதல் 12 வரை மற்றும் அதிகாரங்கள் 13 முதல் 28 வரை ஊழியத்தின் நிகழ்ச்சிகளை தலைசிறந்த இரு மனிதர்கள் வழிநடத்தினார்கள்: பேதுரு மற்றும் பவுல். சுவிசேஷ ஊழியத்தின் நிகழ்ச்சிகள் இரண்டு தலைசிறந்த நகரங்களில் இருந்து

*இயக்குவிக்கப்பட்டன: எருசலேம் மற்றும் சீரியாவின் அந்தி யோகியா. இயேசுவானவர் மோசேயின் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றி, ''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை'' (லூக். 24:44, 45; யாக். 1:25) நிலைநாட்டுகையில் வரலாற்றுப் பதிவேடுகளில் இரு பெரும் மார்க்கங்களான யூதத்துவமும், கிறிஸ்தவமும் காண்பிக்கப் படுகின்றன. இவ்விரு அமைப்புகளையும் இவைகளில் ஒன்றுக்கொன்றுடனான தொடர்புகளையும் புரிந்து கொள்வ தென்பது கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நித்திய நோக்கத்தை உணர்வதற்கு அவசியமாகும்.*

## ஒரு நிறைவேற்றமாக நடபடிகள்

*ஸ்திரீயின் வித்து சாத்தானின் தலையை நசுக்கும் என்று ஆதாம் மற்றும் ஏவாளின் முன்னிலையில் சாத்தானிடத்தில் தேவனால் கூறப்பட்டது (ஆதி. 3:15). ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் இயேசுவானவர் ''கிறிஸ்து'' என்ற அபிஷேகிக்கப்பட்ட அரசரானபோது (அப். 2:36) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. இயேசு மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுந்ததினால், தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்பட்டதால் (ரோமர் 1:5) அவர் (இயேசு) கிறிஸ்துவாக முடிந்தது என்று அப். 2:32, 36ல் பேதுரு பிரசங்கித்தார். அவரது உயிர்த்தெழுதலின் விளைவாக அவரைப் பின்பற்றுகின்ற யாவருக்கும் வெற்றியானது உறுதியாயிற்று/பின் நிகழ் வாயிற்று (1 கொரி. 15:57). இந்தப் பூமிக்கு வந்ததில், போதிக்க வாழ்ந்ததில், இரட்சிக்க இறந்ததில், இயேசு "சிறைப்பட்டவர் களைச் சிறையாக்க'' (எபே. 4:8) வழி நடத்தினார். அவர் "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே" (1 யோவா. 3:8) செயல்பட்டார். அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்கினார்!*

*மோசே, தம்மைப் போல் ஒரு தீர்க்கதரிசியைத் தேவன் எழுப்புவார். அந்த தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு ஒவ்வொருவரும் செவி கொடுக்க வேண்டும் என்று வாக்களித் திருந்தார் (உபா. 18:15-19). அவரே இந்த இயேசு என்று அப். 3:18-24ல் பேதுரு அறிவித்தார்.*

*தாவீதின் வம்சா வழியின் மூலமாகவே மீட்பர் வருவார் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (2 சாமு. 7:12, 13)*

மற்றும் இயேசு மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்ட பொழுது, இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியதாகப் பேதுரு பிரசங்கித்தார் (அப். 2:30-32). தாவீதுக்கு, மேசியா "உன் புத்திரரில் ஒருவனாக" (1 நாளா. 17:11, 12) வருவார் என்று காலவரிசை தரப்பட்டது, பேதுருவின் பிரசங்கத்திலும் இந்த உண்மை அடங்கியிருந்தது (அப். 2:30).

எல்லா மனிதருக்கும் இரட்சிப்பு கிடைக்கும் "கடைசி நாட்களின்" மகத்துவம் பற்றி ஏசாயா கூறினார் (ஏசா. 2:1-4). "கடைசி நாட்களில்" தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய மக்கள்மேல் விசேஷித்த வகையில் வருவார் என்று யோவேல் எழுதினார் (யோவே. 2:28). தானியேல் 2:44ல் நேபுகாத்நேச்சாரின் கனவில் தோன்றிய பெரிய சிலையைப் பற்றித் தானியேல் விளக்கியுரைக்கையில், தேவனுடைய இராஜ்யமானது அந்தச் சிலையினால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்ட அரசர்களின் காலமாகிய[1] "அந்த இராஜாக்களின் நாட்களில்" தொடங்கும் என்றார். அந்த இராஜ்யமானது மிகுந்த வல்லமையுடையதாகவும், நித்தியமானதாகவும் (தானி. 2:44) இருக்கும். பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததும், அப். 2ன் நிகழ்ச்சிகளுமாயுள்ளவை இந்த முன்னுரைத்தல்கள் எல்லாவற்றையும் நடந்தேறும்படியானதாகக் கொண்டு வந்தது.[2]

"தாவீதின் கூடாரம்" திரும்பக் கட்டியெழுப்பப்படு மென்றும், எல்லா இனங்களும் தேவனுடைய ஐக்கியத்தின் ஒரு பகுதியாகும் நாள் வரும் (ஆமோஸ் 9:11, 12) என்றும் ஆமோஸ் கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதின் மூலம் தேவனின் அரசாளுகையையும், முன்னுரைக்கப்பட்ட "கூடாரத்தில்" தேவனுடைய மக்களாய் ஏறெடுக்கப்படும் ஏற்புடைய ஆராதனையையும் குறித்தது. இந்த வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நிறைவேறியிருந்ததாக யாக்கோபு கூறினார் (அப். 15:15-18).

இயேசு தமது சபையைக் கட்டுவதாக வாக்களித்ததுடன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளாது என்றும் கூறியிருந்தார் (மத். 16:18). நடபடிகளின்றி, நாம் சபை தன் செயல்பாட்டைத் தொடங்கியது எப்படி என்பதை ஒரு போதும் அறிய முடியாது (அப். 2). இரட்சிக்கப்படுகின்ற மக்கள் தேவனுடனான ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளப்

*பட்டார்கள் (அப். 2:41, 47) மற்றும் அவர்கள் அழைக்கப் பட்டவர்களான சபையார் என்று அறியப்பட்டார்கள் (அப். 5:11).*

*மேலும் இயேசு தமது இராஜ்யம் பெலத்தோடே வருமென்றும் (மாற். 9:1), பரிசுத்த ஆவியானவர் வரும்போது இந்த பெலம் கொடுக்கப்படும் என்றும் (அப். 1:8) வாக்களித் திருந்தார். பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது அந்த வல்லமை வந்தது (அப். 2:1-4). ஆகையால், கிறிஸ்துவின் இராஜ்யம் வந்திருக்க வேண்டும்; அது பூமியில் நிலைநாட்டப்பட்டிருக்க அல்லது செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*

*இயேசு தாம் தம் அப்போஸ்தலர்களை விட்டுச் சென்ற பிறகு, பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாக வருவார் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யோவா. 16:7-13). இந்த வாக்குத்தத்தத்தின்படியே அவர் அப்போஸ்தலர்களின் மேல் வந்தார் (அப். 2:1-4).*

## *முடிவுரை*

*இரட்சிப்புக்கான தேவனின் மாபெரும் திட்டத்தைப் புரிந்து கொள்ள, கிருபையின் சுவிசேஷத்தை மெய்யாக்க, நடபடிகள் முக்கிய திறவுகோலாக உள்ளது. பெந்தெகொஸ்தே என்ற மாபெரும் நாளுக்கு முன்னதாகக் கூறப்பட்டிருந்த முன்னுரைத்தல்கள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் என்ற மேகங்கள் எல்லாவற்றையும் நடபடிகளானது தெளிவாக்குகின்றது. இந்தப் புத்தகமின்றி நாம், இயேசுவே "நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்" (1 தீமோ. 6:15) என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.*

*நடபடிகளானது "சக்கரத்தின் அச்சு" போல் உள்ளது, இதைச் சுற்றியே வேதாகமத்தின் மற்ற புத்தகங்கள் யாவும் சுழலுகின்றன. இந்தப் புத்தகத்தில் உள்ள மாபெரும் சத்தியங் களைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்! இல்லை யென்றால் வெறும் மனிதர்களால் வளர்க்கப்பட்ட, தவறான போதனைகளுக்கு ஒருவர் வழி மாறிச் சென்று விடக்கூடும். புதிய ஏற்பாட்டு சபையின் ஒரே வரலாரான இதன் எளிமைத்து*

வத்தைப் புரிந்து கொள்ளத் தவறுதல் என்பது நாமகரணக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் உள்ள மாபெரும் தோல்வியா யிருக்கலாம். இந்தப் புத்தகத்தை மட்டும் அவர்கள் புரிந்து கொண்டிருந்தால், நாமகரணக் கூட்டங்கள் என்பவை பாவத்திற்குத் தேவனின் பதில் அல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்க முடியும்.

பாவத்தை நீக்க தேவன் எதை வடிவமைத்தார் என்பதை அவரே இப்புத்தகத்தில் நமக்குக் கூறியிருக்கின்றார். கிறிஸ்து வின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் மட்டுமே நித்தியத் திற்கான இரட்சிப்பின் தீர்வு காணப்படுகின்றது என்று கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபே. 1:22, 23; 5:23). அந்த சபையானது நாமகரணக் கூட்டமல்ல, நாமகரணக் கூட்டம் எதுவும் அந்த சபையல்ல. நாமகரணக் கூட்டங்கள் யாவும் மனிதருடைய கண்டு பிடிப்புகளால் விளைந்தவையாகும்; கர்த்தருடைய சபையோ கிறிஸ்துவுக்குள் தேவன் கொண்டி ருந்த நித்திய திட்டத்தின் விளைவாகும் (எபே. 3:11). முதல் நூற்றாண்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இரட்சிப் படைந்து பரலோகம் செல்ல முடிந்தது, இது நாமகரணக் கூட்டம் எதுவும் தொடங்கும் முன்னாலேயே நடைபெற்றது. அதே இரட்சிப்பானது இன்றைக்கும் விசுவாசித்து, கீழ்ப் படிந்து, நடபடிகளில் பதியப்பட்டுள்ளபடியாக கிறிஸ்தவர் களின் அதே வழிமுறையில் வாழ்பவர்களால் மகிழ்ச்சியுடன் அநுபவிக்கப்பட முடியும்.

வேதாகமத்தில் உள்ள ஏவப்பட்ட வேறு எந்தப் புத்தகத் தைப் பார்க்கிலும் நடபடிகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த தல்ல, இருந்தாலும், மற்ற அறுபத்தி ஐந்து புத்தகங்களையும் புரிந்து கொள்வதற்கு இதுவே திறவுகோலாக உள்ளது. நடபடிகளானது நிச்சயமாகவே தீர்க்கதரிசனத்திற்குப் பதிலாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]நேபுகாத்நேச்சாரின் கனவில் உலக ரீதியான நான்கு அரசுகள் சித்தரிக்கப்பட்டன. அவரது கனவில் வந்த மாபெரும் சிலையானது தங்கத்தால் ஆன தலையையும், வெள்ளியால் ஆன மார்பு மற்றும் தோள்களையும், வெண்கலத்தால் ஆன வயிறு மற்றும் தொடைகளையும்,

*இரும்பால் ஆன கால்களையும், இரும்பு மற்றும் களிமண் கலந்த பாதங்கள் மற்றும் கால் விரல்களையும் கொண்டிருந்தது. பாபிலோனுக்குப் பிறகு, வல்லமையான மற்ற மூன்று அரசுகள் வந்தன. ஆகையால், பாபிலோன் தங்கத்தாலும், மேதிய - பெர்சிய அரசானது வெள்ளியினாலும், கிரேக்க அரசானது வெண்கலத்தினாலும், ரோம அரசானது இரும்பினாலும் குறிக்கப்பட்டன. இரும்பு மற்றும் களிமண்ணால் ஆன பாதங்கள் மற்றும் கால் விரல்கள் என்பவை வித்தியாசப்பட்ட இராஜ்யங்களாயிராமல், நான்காவது அரசின் பாகமாகவே இருந்தன. தானியேல் 2:34ன் சிறு கல்லானது அந்தச் சிலைக்கெதிராய் வந்து, இரும்பு மற்றும் களிமண்ணால் ஆன அச்சிலையின் பாதத்தில் மோதி அதை முற்றிலுமாய் அழித்துப் போட்டது. மனிதர் கைகளால் பெயர்க்கப்படாத அக்கல்லானது பெரிய பர்வதமாகி பூமி முழுவதையும் நிரப்பிற்று (தானி. 2:35). [2]இந்த முன்னுரைத்தல்களில் நிறைவேறிய சில திறவுகோல் கருத்துக்கள் கிறிஸ்துவின் நாமத்தில் போதிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட சில உபதேசங்களை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. "கடைசி நாட்களில்" (ஏசா. 2:2; அப். 2:17) என்பது "அந்த இராஜாக்களின் நாட்களிலே" (தானி. 2:44) என்பதற்கு ஒத்த பொருளுடையதாய் உள்ளது. "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" (ஏசா. 2:2) என்பது "இராஜ்யம்" (தானி. 7:13, 14), "தாவீதின் சிங்காசனம்" (அப். 2:30) அல்லது "தாவீதின் கூடாரம்" (ஆமோஸ் 9:11) என்பதை அர்த்தப்படுத்தவே பயன்படுத்தப்பட்டது. இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் "எல்லா ஜாதிகளுக்கும்" (ஏசா. 2:2) மற்றும் "திரளான ஜனங்களுக்கும்" (ஏசா. 2:3) உரியதாயிருந்தது. இந்த மாபெரும் நிகழ்ச்சிகள் யாவும் "சீயோனில்" (யோவே. 2:32) தொடங்க வேண்டியதாயிருந்தது. "பர்வதங்களின் கொடு முடி" (ஏசா. 2:2) மற்றும் "எருசலேம்" (லூக். 24:47) ஆகியவை புவியியல் ரீதியில் ஒரே இடத்தைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டன.*